# சிறீலங்கா அரசாங்கத்தின் சீருடை அணியாப் பயங்கரவாதிகள்

## ■ பொலிசாரைப் பயன்படுத்தி எம்.பி.க்களை இராஜினாமா செய்யச் சொல்லும் ஜனாதிபதி

சிறீலங்கா அரசாங்கத்தின் பயங்கரவாதச் செயல்கள், தமிழ் மக்களை மட்டுமல்லாமல் சிங்கள மக்களையும் பாதித்த செய்திகள் இப்போது அம்பலமாகி வருகிறன.

சிறீலங்கா அரசாங்கத்தின் சீருடை அணியாப் பயங்கரவாதிகள் சிறீலங்காப் பாதுகாப்புப் படைகளின் முகாம்களில் தாராளமாக நடமாடி வருவதை, தாக்கப்பட்ட பல தமிழர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். இப்போது சிறீலங்கா அரசாங்கத்தின் பாதாள உலகத் தலைவர்களுள் ஒருவரான சொத்தி உபாலி, இரகசியப் பொலிஸ் தலைமைக் காரியாலயத்தில் வைத்து பொலிஸ் அதிகாரிகளுடன் அதிகாரியாக நின்று குண்டாந்தடியால் சிந்தக நளினி பெரேரா என்பவரைத் தாக்கிச் சித்திரவதை செய்து அவரது வலது காலை ஊனமாக்கியதாகவும் இதனால் பெரேரா சிறுநீர் கழிக்க முடியாது இருவாரம் சிகிச்சை பெற்றதாகவும் சிறீலங்கா நீதிமன்றத்தில் தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கிடையில் தற்பொழுது சிறீலங்காப் பொலிஸ் அதிகாரிகளை அனுப்பி பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை இராஜினாமாச் செய்யும்படி சிறீலங்கா ஜனாதிபதி தனது பாராளுமன்ற உறுப்பினர்களை வற்புறுத்திய சம்பவங்களும் வெளியாகியுள்ளன. ■

## பௌத்த மத...

புதிய அரசியலமைப்பைக் கொண்டுவர விரும்புகிறீர்களா?

**பதில்:-** இதனை நாம் மாற்றியமைக்கப் போகிறோம் என்பதை தெளிவாகக் கூறியிருக்கிறோம்.

**கேள்வி:-** அரசியலுக்கும் மதத்திற்கும் இடையிலான உறவுகள் எப்படி இருத்தல் வேண்டும்?

**பதில்:-** மிகவும் ஆழமான ஒரு அரசியல் கேள்வியை என்னிடம் கேட்டுள்ளீர்கள்? பௌத்த குருமார் அரசியலில் ஈடுபடுகின்ற ஒரு நீண்டகால வரலாற்றைத்தான் எம்முடைய பண்டைய மன்னர்கள் காலத்திற்கு முன் கண்டுள்ளோம். ஆனால் எமது கடந்த கால அரசியற் கட்சிகளும் இந்த நடைமுறையை இன வெறிக்காக பயன்படுத்தின. இந்த அரசாங்கம் இதைப் பெரியளவில் செய்கின்றது. பௌத்த மத தலைவர்கள் மட்டுமின்றி சகல மதத்தலைவர்களும் இந்த நாட்டில் சமூக பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்த தமது பங்களிப்பை வழங்க வேண்டும். பௌத்தமத துறவிகள் இத்தேர்தலில் போட்டியிடுவதைப் பொறுத்த வரையில் அதை ஒரு நகைச் சுவை என்றே நான் எண்ணுகிறேன். பௌத்த மத துறவிகள் மட்டுமல்ல, ஏனைய மத துறவிகளும் எதிர்காலத்தில் தமது முக்கியமான பங்களிப்பை அரசியல் கட்சிகளுக்கு செய்ய வேண்டியவர்களாக உள்ளனர். இதற்காக அவர்கள் எந்தக்கட்சி என்று பாராமல் சுயேட்சையானவர்களாக இருக்க வேண்டும். கட்சி அரசியலில் ஈடுபடாமல் இருந்தால்தான் நாடு அவர்களை மதிக்கும். எந்த ஒரு அரசியல் கட்சியுடனும் அவர்கள் இணைந்து கொள்ளாது தமது கௌரவத்தை பேணிக் கொள்ள வேண்டும். நாட்டில் ஏதாவது பிரச்சினைகள் நெருக்கடிகள் தோன்றும் போது அவர்கள் ஆலோசனை கூறலாம் என்றார் சந்திரிக்கா. ■

## தமிழர்....

தேவையானவற்றைச் செய்யுங்கள் என்று.

ஆனால் அவர்கள் செய்யமுடியாத நிலையில் இருக்கிறார்கள். இன்று வன்னிப் பகுதியை எடுத்துப்பார்ப்போமானால் அங்கே இருக்கின்ற 80 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் மன்னார், முல்லை, வன்னி மாவட்டங்களிலே உள்ள குடும்பங்களில் பெரும்பான்மையானவர்கள் விவசாயத்திலும் விவசாயத்தைச் சார்ந்த உழைப்பிலும் தான் தங்கி இருக்கின்றார்கள். ஆனால் அங்கே பயிர் செய்யக் கூடிய அளவிலே அவர்களிடம் முதலீடுகள் இல்லை. அவர்களுக்கு வங்கிகள் அங்கே கடன் கொடுக்கவில்லை, அதேநிலை தான் இங்கேயும்.

இந்த நிலையைப்போக்க வேண்டும்; எங்களுடைய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும்; அதன் மூலம் எங்களுடைய போராட்டத்திற்கு ஒரு வேகத்தைக்கொடுக்க வேண்டும்; மக்களினுடைய வாழ்க்கைத்தரம் உயருகின்றபோது, போராட்டம் தானாகவே விரைவுபடும் என்ற நோக்கத்தினாலேயே நாங்கள் இதைச் செய்திருக்கின்றோம்.

### அழிவுக்கு பயன்படுத்தப்படும் சிறீலங்கா வங்கிப் பணம்

மக்கள் வங்கி நிதியிலே 50 வீதமான நிதி கூட்டுறவாளர்களுடையது. அப்படி இருந்தும், இன்றைய நிலையிலே கூட்டுறவாளர்கள் மக்கள் வங்கியிடமிருந்து தமக்கு தேவையான முழுமையான உதவியைப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருக்கின்றார்கள்.

இந்த நிலை எதற்காக? நாங்கள் இங்கே இருக்கின்ற மக்கள் வங்கியினுடைய ஊழியர்கள் -எங்களுடைய உடன்பிறப்புக்களைக் குறைகூற முடியாது. அவர்கள் சிறீலங்கா அரசாங்கம் சொல்பவற்றைச் செய்பவர்களாக மட்டுமே இருக்கின்றார்கள்.

### அதைத்தான் அவர்களால் செய்யமுடிகின்றது.

இலங்கை வங்கியைப் பொறுத்தவரையிலும் இதுதான் நிலை - மிக அண்மைக்காலத்தில் 'மகளிர் பொற்கணக்கு' என்றொரு கணக்கைத் தொடங்கினார்கள். கோடிக்கணக்கான பணத்தை கொழும்பிற்கு அனுப்பினார்கள். இங்கே பணத்திற்கு தட்டுப்பாடு; திரவப்பணமில்லை; இந்தநிலையிலே அவர்கள் கொழும்பிற்கு அனுப்பினார்கள். அவர்கள் சிறீலங்கா அரசின் கட்டுப்பாட்டின்கீழ் இருப்பதால் அதைச் செய்தார்கள்.

இங்கே நாங்கள் வைப்பிலிட, அதை அங்கே அனுப்பும்போது அது இரண்டு வேலைகளைச் செய்கின்றது. ஒன்று எங்களுடைய மேம்பாட்டைத் தடுக்கின்றது. மற்றையது அப்பணத்தை சிறீலங்கா அரசு தன்னுடைய தேவைகளுக்கு பயன்படுத்துகின்றது -தமிழ் மக்களை அழிப்பதற்குப் பயன்படுத்துகின்றது.

ஆகவே நீங்கள் சிறீலங்கா அரசுக்கு கொடுக்கின்ற, அதாவது வங்கிகளில் இருக்கின்ற ஒவ்வொரு பணமும் மக்களின் அழிவிற்காக -உங்களின் அழிவிற்காகப் பயன்படுத்தப்படுகின்றது. இந்த வைப்பகம் எங்களுடைய மக்களின் மேம்பாட்டிற்காக உங்களுக்குத் தேவையான கடன் வசதிகளைச் செய்துகொடுக்கும் நிலையான வைப்புக்களையும், சேமிப்பு வைப்புக்களையும், நடைமுறைக் கணக்கையும் நாங்கள் நடைமுறைப்படுத்த இருக்கின்றோம். அதைவிட மேம்பாட்டுக் கடன்கள், அடகுக் கடன்கள், வாணிபக் கடன்கள் ஆகியவற்றைத் தொடக்கிவைத்துள்ளோம். அப்படி கொடுக்கின்ற போது நாங்கள் தொடங்கியுள்ள இந்த வைப்பகம் குழந்தைப் பருவத்தில் உள்ள காரணத்தினாலே, நாங்கள் கொடுக்கப் போகின்ற கடனுக்காக முழுமையான காப்பு நிலையொன்றை தேடிக்கொண்டு அந்த வைப்புக்களைக் கொடுப்போம். அப்படிப் பட்டவர்கள், எங்களுடைய வைப்பகம் வளர்ச்சி பெறவேண்டும், எங்களுடைய மக்கள் அனைத்துப்பேரும் இதன்மூலம் நன்மையடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு வைப்பிலிடவேண்டும்" என்றார். ■

## சுதந்திரத்தைத்....

டனை வாங்கியபின், இவளின் சகதோழிகள் இவளை "என்ன ஏன் தொடர்பு எடுக்கேல்லை...?" என்று கேட்டதற்கு "ஆமிக்குக் கிட்டப் போய் விட்டோம். என்னெண்டு கதைக்கிறது... அதுதான் தொடர்பு எடுக்கேல்லை.." என பகிடியாகக் கூறினாள்.

அவர்கள் பாடுபட்டு எடுத்த பயிற்சியைச் செயலில் காட்டும் அந்த நாளும் வந்தது.

பூநகரி முகாமில் மகளிர் அணிக்கெனத் தரப்பட்ட பகுதியில் வீதிக்கு இடதுபக்க அணிக்குத் தயாளினி தலைமை தாங்குகிறாள்.

மிகவும் சிரமமான பயணங்கள். நகர்வுகள் கூட உறுதியின் காரணமாக விரைவில் செய்து முடிக்கப்படுகின்றன.

போர் ஆரம்பமாகியது.

துப்பாக்கி வேட்டுக்களுக்கும், குண்டுச் சத்தங்களுக்கும் நடுவே வோக்கியில் கதம்பமாய் பல குரல்கள் ஒலித்தன. சிறிது நேரம் கழிந்திருக்கும். மகளிர் படையின் பகுதிக்குரிய தாக்குதலைத் தலைமையேற்று நடத்திக் கொண்டிருந்த சிறப்புத் தளபதி ஜனாவை வோக்கியில் அழைத்த தயாளினி, "நாங்கள் 'பவள்' கவச வாகனத்தின் மேல் நிற்கிறோம்..." எனக் கூச்சலிட்டாள்.

தாக்குதல் தொடர்ந்தது. தயாளினியும் நிலைமைக்கு ஏற்றவாறு ஜனாவின் கட்டளைகளைக் கேட்டு தாக்குதல்களைத் தொடர்ந்து கொண்டிருந்தாள்.

பொழுது புலந்தது. சூரியன் மெல்ல மெல்ல மேலெழுந்தது. 'வெற்றியைப் பார்க்க விரும்பினாலும் வேங்கைகளின் இழப்பை எப்படிப் பார்ப்பேன்' என்று சொல்வது போலிருந்தது. பகல் சண்டையின் நடுவே 9-30 மணியிருக்கும். தயாளினியின் குரலை வோக்கியில் காணவில்லை. சிறிது நேரத்தில் வயிற்றில் காயம்பட்ட நிலையில் இருவரின் கரங்களின் மேல் தயாளினி "என்ரை றைபிளையும் வோக்கியையும் எடுங்கோ..." அவளின் வாய் மெல்ல இவ்வாறு கூறிக்கொண்டிருந்தது.


காயப்பட்டவர்களை ஏற்றும் வாகனம் வரும்வரை ஒரு இடத்தில் காயப்பட்டவர்களை வைத்திருந்தோம். ஆனால் வாகனம் வருவதற்கு முன்னரே அவளின் தலை துவண்டு இந்த மண்ணை ஆசையுடன் முத்தமிட்டது.

எமது வெற்றியைக் கூட கருதாமல் கலங்கிய கண்ணுடனும் இறுகப் பற்றிய துப்பாக்கியுமாக "தயாளினி அக்காவுக்கு என்ன மாதிரி?" எனக் கேட்ட அவளின் குழுப்பிள்ளைகளைப் பார்க்க அவளின் ஆவி நிச்சயம் இங்கிருந்திருக்காது. மூதூருக்குப் பறந்திருக்கும்.

இவள் மட்டுமல்ல இவளைப் போன்ற இன்னும் எத்தனையோ போராளிகளின் ஆசைக்கிணங்க, தென்தமிழீழ மக்கள் தமிழீழ விடிவின் பின் நிம்மதியாய் தமது மண்ணில் வாழும்காலம் வெகு தூரத்திலில்லை. ■

■ சித்ரா

நன்றி:சுதந்திரப் பறவைகள்



## தனியரசிற்கான...

பப்படல் வேண்டும். இது உங்களது நன்மைக்காக கட்டி எழுப்பப்படுகிறது. இது எமது தேசிய அபிவிருத்தியை இலக்காகக்கொண்டு அமைக்கப்படுகிறது. எங்களது மக்கள் இந்த வைப்பகத்தில் முதலீடுகளைச் செய்யவேண்டும். பணத்தை காப்புறுதியாக வைக்கவேண்டும். அந்த நிதியிலிருந்து எமது தேசிய அபிவிருத்திக்கான திட்டங்களுக்கு நாங்கள் கடன்கொடுக்க வேண்டும். மக்களுக்கு உதவும் முகமாக பல உன்னத இலட்சியங்களோடு இந்த காப்பகம் திறக்கப்படுகிறது.

### வைப்பகத்தின் வெற்றி மக்களின் கைகளில்

இது ஒரு முதல் முயற்சி. வருங் காலத்தில் இதுபோன்ற வைப்பகங்கள் மாவட்டரீமியில் அமைக்கப்படும். தமிழர் ஒரு தன்னாட்சியை நிறுவும் ஒரு முக்கியதிட்டமாக இந்த வைப்பகம் உருவாக்கப்படுகிறது என்பதை நான் உங்களுக்கு வலியுறுத்த விரும்புகிறேன்.

அதாவது இந்த வைப்பகத்தின் வெற்றி உங்களது கையில் தங்கியுள்ளது. இந்த வைப்பகத்தை வெற்றிகரமாக செயலாக்கம் பெறச்செய்வதற்கு உங்களது ஒத்துழைப்பும் ஆதரவும் என்றும் தேவை அது வளர்ந்து ஈற்றில் எமது மக்களின் நல்வாழ்விற்காக எமது தேசத்தின் பொருண்மிய வளர்ச்சிக்காக உதவும் என்பது திண்ணம் என்றார். ■

## நாம் கடந்து...

இடையில் சிரித்து விட்டு கொலரை இழுத்துவிட்டவாறு சொல்வான், "எங்கட தமிழீழத்தின் தலைநகரம் திருகோணமலைதான். சொல்வதை வடிவாகக் கேளுங்கள்" என்று தொடர்வான். தான் இயக்கத்துக்கு வந்ததையும் தன் குடும்பத்தைப் பற்றியும், தான் வீட்டில் செய்கின்ற குறும்புகள் பற்றியும் சொல்வான். பிறகு சொல்வான் "அம்மாவுக்குச் செய்த குறும்புக்குத்தான் இப்ப பட்டினி கிடக்கிறன்" என்பான். உண்மையில் அவன் சரியான குறும்புக்காரன்தான். திடீரென பழைய நினைவுகள் கலைய இவனைப் பார்த்தேன். அசைவையே காணவில்லை. அவன் எங்கள் தோள்களிலேயே வீரச்சாவைத் தழுவிவிட்டிருந்தான். எங்களை அறியாமல் எங்களின் கண்கள் அந்த மாவீரனுக்கு கண்ணீர் வணக்கம் செய்தன. நிகழ்ந்திடும் சோகங்கள், தொடர்ந்திடும் மரணங்கள் எங்களை தளர்வடையச் செய்யாது. இந்தச் சோகங்களாலும், சாவுகளாலும் நாங்கள் மேலும் மேலும் உறுதியடைவோம் என எண்ணிக் கொண்டு மீண்டும் எங்களுடைய நிலைகளுக்கு எதிரியை அழித்தொழிக்கும் வேகத்துடன் விரைந்து சென்றோம்.

மூன்றாம் நாள் எதிரியின் கடும் எதிர்ப்புக்கும் மத்தியில் மீண்டும் முன்னேறினோம். எதிரியின் அரணில் இருந்து ஏறத்தாழ ஐம்பது யார் தூரத்தில் நிலை எடுத்திருந்தோம். இரவு கட்டாயம் எதிரின் எல்லையுள் நுழைந்து தளத்தைத் தகர்க்க வேண்டும் என்று எமக்குக் கூறப்பட்டிருந்தது.

இந்த நேரத்தில் சேற்றிலும், சகதி நீருக்குள்ளும், நெல் சுணைக்குள்ளும், நுளம்புக் கடிக்குள்ளும் மூன்று பகலும் ஒரு இரவும் இருந்ததால் எனக்கு சரியான காய்ச்சல் அடிக்கத் தொடங்கிற்று. உடனே சோதியாக்கா மாத்திரையை எடுத்து வயலில் தேங்கிநின்ற நீருடன் விழுங்க வைத்தார். இரவானதும் காய்ச்சல் எனக்கு ஓரளவு தணிந்துவிட்டது.

மூன்றாம் நாள் இரவு தாக்குதலை மீண்டும் ஆரம்பித்தோம். தாக்குதல் மிகக் கடுமையாக இருந்தது. நாங்கள் எதிரியை தரை வழியாக மட்டும் தாக்கிக் கொண்டிருந்தோம். ஆனால் எதிரியோ விமானத் தாக்குதல், எறிகணைத் தாக்குதல் என்று கடுமையாகத் தாக்கினான். நாங்களும் வேகமாக முன்னேறித் தாக்கினோம். வயல் வரம்புகள் மட்டுமே எமக்கு காப்பரணாக இருந்தது. நாங்கள் பல பக்கங்களாலும் சென்று எதிரியைத் தாக்கினோம். ஒரு பக்கத்தில் நாங்கள் பத்துப் பேர் இராணுவ நிலையில் இருந்து இருபது யார் தூரத்தில் படுத்திருந்து எதிரியைத் தாக்கிக் கொண்டிருந்தோம். எங்களுக்கு காப்பரண் இல்லாததினால் நிலத்தோடு முகத்தைச் சரிவைத்துக் கொண்டே தா்க்குதலைத் தொடுத்துக் கொண்டிருந்தோம். மெதுவாகத் தலையைத் தூக்கினால்கூட நெற்றியில் வெடி விழும். இதில் எங்களோடு வந்த போராளிகள் நால்வர் எதிரியை அவதானிக்க மெதுவாகத் தலையைத் தூக்கியபோது, நெற்றியில் வெடி வாங்கி வீரச்சாவைத் தழுவினார்கள்.

அன்றைய இரவுத் தாக்குதல் மிகவும் முக்கியம் வாய்ந்தது. அந்த ஒரு இரவில்தான் கல்லுண்டாய்வெளி இராணுவத் தளத்தை தகர்த்தோம். எதிரியின் ஆயுதங்களையும் அள்ளி எடுத்தோம். வெற்றியோடு வெளியே வந்தோம்.

எங்கள் ஒவ்வொருவரையும் நாங்களே பார்த்துச் சிரித்தோம். உடலெல்லாம் ஒரே சேறு. எங்களில் இருந்து வந்த சேற்றின் நறுமணம் எல்லோரினது மூக்கையுமே துளைத்தது. "இது தான் போராட்டம். இதுதான் எங்கள் வாழ்க்கை" எனச் சொல்லிச் சிரித்தோம்.

கல்லுண்டாய் வெளித் தாக்குதலைத் தலைமை தாங்கி வழிநடத்திய லெப். கேணல் ஜொனி அண்ணா, "இனிப் பிள்ளைகள் எல்லாம் போய் குளித்துவிட்டு கொஞ்சம் ஓய்வு எடுங்கோ. அடுத்த சண்டைக்குப் போக வேண்டும்" என்று சொல்லி வாய் மூடுவதற்கிடையில், "சங்கானைக்கு ஆமி வந்துவிட்டான்" எனச் செய்தி வந்தது. அந்த நிமிடமே அடுத்த சண்டைக்காகச் சங்கானையை நோக்கி ஓடினோம்.

'குளிக்க வேண்டும். உடை மாற்ற வேண்டும். உண்ண வேண்டும். உறங்க வேண்டும்' என்ற எல்லா எண்ணமும் மறந்து 'சங்கானைக்கு வந்த இந்தியனை விரட்ட வேண்டும்' என்ற எண்ணம் மட்டுமே மேலோங்கி நிற்க, சங்கானையை நோக்கி விரைந்தோம். ■